அந்த ஆய்வுப் பணிகள் தொடர்ந்து முடிந்து இந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப் பணிகள் தொடங்கி விடுமா ? ஆய்வுப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா ? அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்டதாகச் சொல்வது பொய். ஏற்கனவே அது சம்பந்தமான அதிகாரிகள் நியமிக்கப் பட்டு அங்கே செல்ல இருக்கிறார்கள். அவர்கள் ஆய்வு செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மைக்கு மாறானது என்று சொல்ல வேண்டும்.

காமராசர் மாவட்டம் புல்வாய்க்கரையில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

*17—(*வினா எண். 6452)*—**திரு. க. பாரமலை :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராசர் மாவட்டம் புல்வாய்க்கரை கிராமத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டம், புல் வாய்க்கரை கிராமத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் அமைப் பது குறித்து பிரேரணை ஏதுவும் பெறப்படாத காரணத்தால் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவில்லை.

நெல்லை மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டை சீர்திருத்தம்.

*18—(*வினா எண்.7096)*—**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை சீர்திருத்தம் செய் வதற்கான திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

1987 மார்ச் 2]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கட்டபொம்மன் வீர வரலாற்றைச் சித்தரிக்கும் புதிய வண்ண விளக்கப் படங்கள் கொண்ட சித்திரக் கூடம் அங்கு அமைக்கப்பெறும். கட்டபொம்மன் கோட்டைக்கும், ஜக்கம்மாள் கோயிலுக்கும் நடுவே தடுப்புச் சுவர் கட்டும் பணியும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3 முதல் 5 வரை உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மின் வாரியத்திற்கு தரவேண்டிய தொகை.

3—(*வினா எண். 1329)—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மின் வாரியத்திற்கு கட்ட வேண்டிய பாக்கி முழுவதும் கட்டாததால் தமிழகம் முழுவதும் ஏராளமான மேல்நிலைத் தொட்டிகளுக்கும், தெரு விளக்குகளுக்கும் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்திக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மின் கட்டண பாக்கி வைத்திருந்தாலும், ஊராட்சி மேல்நிலைத் தொட்டிகள் கட்டி தயாராக இருந்தால் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. ஆனால் பாக்கி வைத்திருக்கும் ஊராட்சிகளில் புதிய தெரு விளக்குகளுக்கு அவை பாக்கியைச் செலுத்திய பிறகே மின் இணைப்பு